# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**
**CC.No. 61/2016**
**Deposition of Witness for PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வேல்முருகன் | Caste | : | |
| Father/Husband Name | : | பாஸ்கரன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( A1 present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 16.06.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிகிறேன். உசிலம்பட்டி மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக 11.04.2016ம் தேதி மாலை 8.15 மணிக்கு 45 வயது மதிக்கத்தக்க பாண்டிலிங்கம், த/பெ. சின்னமாயத்தேவர் K.பெருமாள்பட்டி, கல்லூத்து போஸ்ட், உசிலம்பட்டி தாலுகா சார்பு ஆய்வாளர், செக்காணூரணி போலீஸ் ஸ்டேசன் கடித எண்.39/MLGPS/2016 அவர்கள் அடையாளம் தெரிந்த 3 நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்தார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. இடது மார்பில் நகக்கீறல், 2. இடது கணுக்காலில் வீக்கத்துடன் கூடிய இரத்தக்கட்டு காணப்பட்டது. அவருக்கு எலும்புமுறிவு உள்ளதா என்று அறிய எலும்பு முறிவு மருத்துவராக பரிந்துரைக்கப்பட்டது. அவருக்கு எந்த எலும்புமுறிவும் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் என சான்று வழங்கினேன்.

(அந்த காயச்சான்று **அ.சா.ஆ.4**ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

எந்த ஆயுதங்களால் தன்னை 3 நபர்கள் தாக்கியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இரத்தப்போக்கு உள்ள காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கை, கன்னம் மற்றும் முதுகிலோ எந்தவொரு காயமும் இருந்ததாக காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நடத்துனரோ அல்லது ஓட்டுநரோ தான் பயணம் செய்த பஸ்ஸிலிருந்து தவறி படிக்கட்டிலிருந்து கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். காயம்பட்டவர் சொன்ன நேரத்திற்கு சற்று முன்னரோ அல்லது பின்னரோ மேற்படி காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை